இணைப்பு I.

[8-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 400-க்கான விடையைக் காண்க.]

மாண்புமிகு முதல் அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், அரிஜன நலத்துறை அமைச்சர் ஆகியோர் பதவியேற்றபோது, அவர்களுடைய சொந்த வீடுகளில் பின்வரும் கட்டிட வேலைகளை நிறைவேற்றுவது தேவையாக இருந்தது :—

	மதிப்பீட்டுத் தொகை. ரூபாய்.
முதலமைச்சர் இல்லத்தில்—	
பார்வையாளர்களுக்காக வீட்டின் மதில் சுவருக்குள் ஓரளவிற்கு நிலையான கொட்டகை ஒன்றைக் கட்டுதல்.	8,150
தனி எழுத்தருக்கு இடவசதியளிப்பதற்காக வீட்டின் முன் தாழ்வாரத்தில் சிறிய அடைப்பு ஒன்றும், காவல் மேடையொன்றும் (Sentry platform) அமைத்தல் ..	1,705
செப்பனிடு-செலவுகள் ..	2,000
மின்சார விளக்குகள் முதலியன பொருத்துதல் ..	235
மின்சார விசிறிகள் அமைத்தல் (1,804+465) ..	2,269
பார்வையாளர் அறைக்கு மின்சார விளக்குகள் முதலியன இடல் ..	600
மொத்தம் ..	14,959

பொதுப்பணித்துறை அமைச்சர் அகத்தில்—	
வீட்டின்முன் பார்வையாளர் அமர சிமிட்டி காண்கிரிட் தரை பரவுதல் ..	
பார்வையாளருக்குத் தனியிருப்பு அளிக்கவும், அவ் விருப்பிலிருந்து தனிமை பெறவும் சிறிய சுவர் ஒன்றை எழுப்புதல் ..	3,500
பார்வையாளர்கள், காவலர்கள் பயனுக்காகக் கழிவறை ஒன்றைக் கட்டுதல் ..	
காவலர்களின் பயன் கருதி அடைப்பு ஒன்றை அமைத்தல்	
மின்சார விசிறிகள், கூடுதல் மின்சார விளக்குகள் முதலியன ..	1,085
மின்சார மணி இவற்றை அமைத்தல் ..	
மொத்தம் ..	4,585

	ரூ.	
அரிஜன நலத்துறை அமைச்சர் மனையில்—		
போலீஸ் காவலர் அடைப்பு ஒன்றைக் கட்டுதல் ..	430	
தனி எழுத்தரின் உபயோகத்திற்காக முன் தாழ்வாரத்தில் தடுப்புச் சுவரும் கண்ணாடிச் சாளரமும் அமைத்தல் ..	620	
சிமிண்ட் தகடுகள் வேயப்பட்ட தற்காலிக வண்டிக் கொட்டில் (garage) ஒன்றைக் கட்டுதல் ..	2,250	10,580
பார்வையாளர்களுக்காக தற்காலிக அறை ஒன்றைக கட்டுதல் ..	5,500	
செப்பனிடு செலவுகள் ..	1,780	

அரிஜன நலத்துறை அமைச்சர் மனையில்—
தொடர்ச்சி.

		மதிப்பீடுத் தொகை.
		ரூ.
மின்சார வசதிகள், மின்சார விளக்குகள் போன்ற பிறவற்றை ஏற்படுத்தல் (2,080+1,400)	3,480	4,269
பார்வையாளர் அறையில் மின்சார விசிறி அமைத்தல், மோட்டார் வண்டிக்கொட்டகையிலும், பார்வையாளர் அறையில் மின்சார விளக்குகள் முதலியனவும், மின்சார மணியும் பொருத்துதல்	789	

முதல் அமைச்சர் வீட்டில் 14,959 ரூபாய், செலவிலும், பொதுப்பணித் துறை அமைச்சர் வீட்டில் 4,585 ரூபாய்ச் செலவிலும், செய்துள்ள பணிகளுக்கான செலவுத்தொகை முழுவதையும் முறையே முதல் அமைச்சரும், பொதுப்பணித்துறை அமைச்சரும், தாங்களே ஏற்றுக்கொண்டு தொகையையும் அளித்து விட்டார்கள். முதல் அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர் இவர்களுடைய அரசு அலுவல்கள் குறித்து அவர்களுடைய வீட்டில் பணியாற்றும் தனிப்பட்ட அலுவலர்கள், பார்வையாளர்கள், படைக் காவலர்கள் ஆகியோருக்காக இடவசதி செய்து தருவதற்கு மேற்சொன்ன பணிகள் பயன்படுவனவாயினும் முதல் அமைச்சரும் பொதுப்பணித்துறை அமைச்சரும் அவற்றிற்கான செலவுகளைத் தாங்களே ஏற்றுள்ளனர். இதைப்போலவே அரிஜன நலத்துறை அமைச்சர் வீட்டிலும் அவருடைய அரசு அலுவல்களை நிறைவேற்றுவதற்காக அமர்த்தப்பட்டுள்ள தனி அலுவலர்கள், படைக்காவலர்கள், வரும் பார்வையாளர்கள் ஆகியவர்களுக்கு இடவசதி செய்து தருவதற்காக மேற்சொன்ன கட்டட வேலைகளை 10,580 ரூபாய் செலவில் செப்பனிடவேண்டி வந்தாலும், அச் செலவு முழுவதையும் அவர்களே ஏற்றுக்கொண்டு கொடுத்துள்ளார்கள். பார்வையாளர் அறையில், மின்சார விசிறிகள் அமைத்தல், மோட்டார் வண்டிக் கொட்டகைக்கு மின்சார விளக்குகள் முதலியன போடுதல் மின்சார மணி ஒன்றைப் பொருத்துதல் ஆகியன போன்ற செலவினத் தொகையாகிய 4,269 ரூபாய் மட்டும் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வமைச்சர் பதவியை விட்டு விலகுங்காலையில், இப்பொருள்கள் அவரது வீட்டிலிருந்து அகற்றப்பட்டு, அரசிடம் ஒப்புவிக்கப்படும்.

அமைச்சர்களின் உறைவிடங்களில் ஏற்கெனவேயுள்ள மேஜை, நாற்காலி முதலியவற்றின் மதிப்பு பற்றிய விவரங்களும் அதன் பின்னர் 30-4-1967 வரையில் வழங்கியுள்ளவற்றின் மதிப்பு பற்றிய விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும், பெயரும் உறைவிடமும்.	ஏற்கெனவேயுள்ள மேஜை, நாற்காலி முதலிய வற்றின் மொத்த மதிப்பு.	இப்போது புதிதாக வழங்கியுள்ள மேஜை நாற்காலி முதலிய வற்றின் மதிப்பு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	ரூ.	ரூ.	ரூ.
1 மாண்புமிகு முதலமைச்சர் 9, அவென்யூ சாலை, நுங்கம்பாக்கம்	3,661.67	3,103.06	6,764.73

தொடர் எண்ணும், பெயரும், உறைவிடமும்.	ஏற்கனவே யுள்ள மேஜை, நாற்காலி முதலிய வற்றின் மொத்த மதிப்பு.	இப்போது புதிதாக வழங்கி யுள்ள மேஜை நாற்காலி முதலிய வற்றின் மதிப்பு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	ரூ.	ரூ.	ரூ.
2 மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், 7-எ, 4-வது தெரு, தெற்கு கோபாலபுரம், சென்னை ..	2,150.42	650.00	2,800.42
3 மாண்புமிகு அரிஜன நல த்துறை அமைச்சர் 96/97-எ, கீழ்ப்பாக்கத் தோட்டம், சென்னை-10	871.00	6,676.00	7,547.00

இந்த மேஜை நாற்காலி முதலான பொருள்கள், இந்த அமைச்சர்கள் பதவி நீங்குங்கால், அகற்றப்பட்டு அரசிடம் ஒப்புவிக்கப்படும்.

In the residence of Chief Minister—

	Estimated amount.
	RS.
Construction of a semi permanent shed in the compound for visitors.	8,150
A small enclosure in the front verandah for accommodating the personal clerk and sentry pl.tform.	1,7(5
Repairs	2,000
Electrical installations	235
Provision of fans (1804+465)	2,269
Electrical installations for visitors' room ..	600
Total ..	14,959

In the residence of Minister (Works)—

	Estimated amount.
	RS.
Provision of cement concrete flooring in front of the house for visitors to sit. Construction of a small masonry wall to ensure privacy for and from visitors. Construction of a water closet for the use of the visitors and sentries. Enclosure for the use of sentries ..	3,500
Provision of fans and additional electrical installations and a calling bell.	1,085
Total ..	4,585

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

		Estimated amount. RS.
In the residence of Minister (Harijan Welfare)—		
Construction of a Police Guard platform.	430	10,580
Partition and glazed window in the front verandah for use by the personal clerk.	620	
Temporary garage with A. C. sheets ..	2,250	
Temporary visitors' hall	5,500	
Repairs	1,780	
Provision of electrical amenities and installations (2,080+1,400).	3,480	4,269
Provision of fan in the visitors' hall and electrical installations in the car shed and visitors' hall and calling bell	789	

The cost of all the items of work carried out in the Chief Minister's house and in the residence of Minister (Works) are entirely met and paid by the Chief Minister and Minister (Works) amounting to Rs. 14,959 and Rs. 4,585 respectively, eventhough most of the works carried out related to the provision of accommodation for the sentry and the visitors and the personal official staff who work at the residence in connection with the official functions of the Chief Minister and Minister (Works). Similarly the cost of repairs amounting to Rs. 10,580 carried out in the residence of Minister (Harijan Welfare) has been borne and paid entirely by her though the works were needed for accommodating the visitors and the personal staff and the sentry in connection with the discharge of her official duties. The cost of the electrical installations, such as providing fans in the visitors' hall and electrical installations to the car shed and provision of a calling bell amounting to Rs. 4,269 alone is borne by the Government and even these items will be removed and handed over to the Government as and when the Minister concerned demits office.

The particulars of the value of furniture available already and that of additonal furniture since supplied up to 30th April 1967, is as follows :—

Serial number and name of residence.	Total value of existing furniture.		value of additional new furniture. now supplied.		Total.	
(1)	(2)		(3)		(4)	
	RS.	P.	RS.	P.	RS.	P.
1 Honourable Chief Minister, No. 9, Avenue Road, Nungambakkam, Madras.	3,661	67	3,103	06	6,764	73
2 Honourable Minister for Works, No. 7-A, IV Street, South Gopalapuram, Madras.	2,150	42	650	00	2,800	42

Serial number and name of residence.	Total value of existing furniture.		Value of additional new furniture now supplied.		Total.	
(1)	(2)		(3)		(4)	
	RS.	P.	RS.	P.	RS.	P.
3 Honourable Minister for Harijan Welfare, No. 96/97-A, Kilpauk Gardens, Madras-10.	871	00	6,676	00	7,547	00

The furniture will be removed and handed over to Government as and when the Minister concerned demits office.

இணைப்பு II.

[12-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 401-க்கான விடையைக் காண்க.]

முன்னாள் முதல் அமைச்சர் அவர்களின் சொந்த வீட்டில் அரசின் செலவில் மராமத்து வேலைகள் ஒன்றும் செய்யப்படவில்லை.

அவர்களின் சொந்த வீட்டில் பின்வரும் வசதிகள் செய்து கொடுக்கப் பட்டன—

	வருடம்	தொகை ரூ.	பை.
1 குளிர் சாதனப் பெட்டி	1964	2,150	00
2 ஊன்று மின் விசிறி	1964	195	00
3 மேஜை மின் விசிறி	1964	122	00
4 நகர்த்தக்கூடிய தடுப்பும் தேக்குமரத் தடுப்பும்.	1964	300	00
5 அலமாரி (சுவரில் பதிக்கப்பட்டது) ..	1965	525	00
6 தட்டிகளைப் பழுதுபார்த்தல்	1965	570	00
7 மேஜை, நாற்காலி, விரிப்பு போன்றவை அளிக்கப்பட்ட விவரம்—			
	1950-ம் ஆண்டிற்கு முன்	1,929	04
	1957–58	462	00
	1963	1,192	00
	1964	580	00
	1965	525	00

முன்னாள் முதல் அமைச்சர் பதவியிலிருந்து விலகியதும் சுவரில் பதிக்கப்பட்ட அலமாரி (இனம் எண் 5) தவிர மற்ற எல்லா மரசாமான்களும் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. அவர் அந்த அலமாரியை வைத்துக்கொள்ள விரும்புவதால் இந்தப் பொருளின் தேய்மான விலைக்கு அவருக்குக் கொடுத்துவிட அரசு இணங்கியுள்ளது.

No maintenance repairs to the residence of the former Chief Minister were done at Government cost.

The following items of amenities were provided in his private residence:—

	Year.	Amount in rupees.	
1 Provision of frigidaire	1964	2,150	00
2 Provision of pedestal fan	1964	195	00